# சுபீட்சம்

சுபீட்சம் SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

புதன்கிழமை 08.09.2021 supeedsam.com supeedsam@gmail.com







# கிழக்கு மாகாணத்திலிருந்து மாலைதீவுக்கு அள்ளிச்செல்லப்படும் பெருமளவான மணல்

## அரிசி, சீனிக்கு அவசரகால சட்டம் என்றால் யுத்தம் ஏற்பட்டால் என்ன செய்வீர்கள்?

### சரத் பொன்சேகா கேள்வி



(காந்தன்)

மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் மக்களை அடக்குவதற்கே இந்த அவசர கால சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

அரிசி, சீனிக்கு அவசரகால சட்டம் கொண்டுவருகின்றீர்கள் என்றால் யுத்தம் ஏற்பட்டால் என்ன செய்வீர்கள்? என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

சட்டவிரோதமாக சம்பாதித்த பணம், வரி செலுத்தப்படாது வைத்திருந்த கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கும் செயற்பாடே நிதி அமைச்சரினால் கொண்டுவரப்பட்டுள்ள

02 ஆம் பக்கத்தில்...

## பாராளுமன்றத்தில் சாணக்கியன் வெளியிட்ட அதிர்ச்சி தகவல்

(காந்தன்)

மாலைதீவில் மற்றுமொரு தீவை உருவாக்குவதற்காக சில தரப்பினரால் ஸ்ரீலங்காவின் கிழக்கு மாகாணத்திலிருந்து பெருமளவு மணல் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுன்றத்தில் உரையாற்றிய போது அவர் இந்த அதிர்ச்சித் தகவலை

02 ஆம் பக்கத்தில்...



## வடக்கு, கிழக்கில் சடலங்களை தகனம் செய்வதில் பாரிய சிக்கல்

### சுமந்திரன் சுட்டிக்காட்டு



(ராஜ்)

வடக்கு கிழக்கில் சடலங்களை தகனம் செய்வதில் பாரிய சிக்கல் நிலை ஏற்பட்டுள்ள நிலையில் அதற்கு தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பில் மேலும் இருவர் உயிரிழப்பு

### 206 பேருக்கு கோவிட் தொற்று



(மட்டுநிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலயத்தில் 2 பேர் உயிரிழந்ததுடன், 206 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

02 ஆம் பக்கத்தில்...

## நாடு மோசமான நிலையில் ஒத்துழைக்க முன்வாருங்கள்

### எதிர்க்கட்சிகளுக்கு பஸில் அழைப்பு

(காந்தன்)

நீண்டகால பொருளாதார வேலைத்திட்டங்கள் மற்றும் கொவிட் நிலைமைகள் காரணமாக இந்த ஆண்டில் மாத்திரம் நாம் எதிர்பார்த்ததை விடவும் 1500- 1600 பில்லியன் ரூபா குறைவான வருமானமே கிடைத்துள்ளது.ஆனால் நாட்டின் வருமானத்தை விடவும் செலவுகள் அதிகரித்துள்ளதாக நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இவ்வாறான கடினமான நேரத்தில் தனியாக அரசாங்கத்தினால் பிரச்சினைகளை தீர்க்க முடியாது. எனவேஎதிர்க்கட்சிகளினதும்

02 ஆம் பக்கத்தில்...



## நாடு திரும்பிய சாதனை வீரர்களுக்கு விமான நிலையத்தில் மகத்தான வரவேற்பு

டோக்யோவில் நடைபெற்ற பராலிம்பிக் போட்டிகளில் பங்கேற்று இலங்கைக்கு பதக்கங்களை பெற்றுக்கொடுத்த வீரர்களான தினேஷ் பிரியந்த ஹேரத் மற்றும் சமித துலான் கொடிதுவக்கு நேற்று மாலை நாட்டை வந்தடைந்துள்ளனர்.

02 ஆம் பக்கத்தில்...



## துப்பாக்கியால் இருவர் மீது சரமாரி தாக்குதல்

### வவுணதீவில் போலிஸாரின் கைவரிசை

மட்டக்களப்பு வவுணதீவு பகுதியில் வவுணதீவு பொலிஸாரினால் இருவர் மீது சரமாரியாக தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுணதீவு பகுதியில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணியளவில் தாக்குதல் சம்பவமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...


MULTI CONSULTING
Versicherung & Finanz
சமூக அக்கறை எமது இலக்கு
குறைந்த கட்டணத்தில் வீட்டுக்காப்புறுதி
3 Säule ஆயுள்காப்புறுதி
Im Rietpark 5 ,8180 Bülach, Zürich, Switzerland
info@multiconsulting.ch
079 765 50 57 www.multiconsulting.ch


## முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் பசில் காங்கிரஸ் உறுப்பினர்களாகவே செயற்படுகின்றனர்



முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் என்பதை விட பசில் காங்கிரஸ் உறுப்பினர்களாகவே முஸ்லிம் கட்சிகளின் உறுப்பினர்களை காண்பதாக பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## தமிழர்களை ஒடுக்க கொண்டுவரப்பட்டது இன்று சிங்களவர்களுக்கு பயன்படுத்தப்படுகிறது



(காந்தன்)

தமிழரின் போராட்டங்களை ஒடுக்குவதற்காக கொண்டுவரப்பட்ட அவசரகால சட்டத்தை இப்போது சிங்களவர்களின் போராட்டத்தை ஒடுக்குவதற்காக கொண்டுவர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt

CEO

Eidgenössische Finanzmarktaufsicht Nr.35302

Fachmann für versicherung & vorsorge

Hauptstrasse 54

6015 Luzern

Switzerland

079 8000 100

arulnages@yahoo.com

finma 34598

25605: Cicero





Kamal GmbH
Kamal Kredit & Hypothek
Kamal Kredit Hypothek
Zürcherstrasse 47b, 8426 Lufingen
043 3335971, 079 6502 615
swisssenthu@hotmail.com
கடன்பெறுவது, வீடு வாங்குவது சம்பந்தமான ஆலோசனைகள் தேவையெனில் எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.
வங்கிக்கடன் பெற்றுக்கொடுப்பதில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம்.
நீங்கள் 5 வருடங்களுக்கு முன்பு வீடு வாங்கியிருந்தால் குறிப்பிட்ட வீட்டை வைத்து கடன் பெறலாம். அல்லது இன்னொரு வீடுவாங்குவதற்கு முதலீடு செய்யலாம்.


## சுதேச வைத்தியர்களுக்கு நியமனங்களை வழங்குங்கள் நியமனத்திற்காக காத்திருக்கும் துறைசார் பட்டதாரிகள் கோரிக்கை

(கதிரவன், ஹஸ்பர் ஏ ஹலீம்)

கொரோனாவை சுதேச வைத்தியத்தின் மூலம் கட்டுப்படுத்த தகுதி வாய்ந்த 1000 வைத்தியர்கள் வேலைவாய்ப்பின்றி வீட்டில் இருக்கிறோம் என வேலைவாய்ப்பற்ற சித்தவைத்திய சங்கத்தின் தலைவர் வைத்தியர் ஹபில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் பாதிக்கப்பட்ட பிரஜைகளுக்கு நிவாரணம் வழங்க ஐக்கிய நாடுகள் சபை தலையிட வேண்டும்; முன்னணி கைதிகளின் உரிமைக்கான குழு கோரிக்கை

அடிப்படை மனிதாபிமானக் கோட்பாடுகளுக்கு எதிரான ஏற்பாடுகளைக் கொண்ட பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை பிரஜைகளுக்கு நிவாரணம் வழங்க ஐக்கிய நாடுகள் சபை தலையிட வேண்டுமென முன்னணி கைதிகளின் உரிமைக்கான குழு கோரிக்கை விடுத்துள்ளது.

செப்டம்பர் 13ஆம் திகதி ஆரம்பமாகும் பேரவையின் 48ஆவது அமர்வில் இலங்கை குறித்த அறிக்கையில் பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் அந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உரிமைகள் குறித்து குறிப்பிட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கைதிகள் உரிமைகளை பாதுகாக்கும் குழு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிசெல் பெச்லெட்டுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழுவின் தலைவரான சட்டத்தரணி சேனகா பெரேரா கையெழுத்திட்டு, அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்த கடிதம், சட்டவிரோதமாக தடுத்து வைத்தல் குறித்த ஐ.நாவின் விசேட தூதுவர் மற்றும் ஐரோப்பிய நாடாளுமன்றத் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வழங்கப்படும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை குறித்து மீளாய்வு செய்கையில், நீண்ட காலமாக தடுத்து வைத்திருப்பவர்கள் குறித்து கரிசனை செலுத்துமாறு, ஐரோப்பிய நாடாளுமன்றத்திடம் அந்த கடிதத்தின் ஊடாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தனிமனித சுதந்திரம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு தீங்கு விளைவிக்கும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் துன்புறுத்தல்களுக்கு தீர்வு காணுதல் என்ற தலைப்பில் இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டம் தற்காலிகமாக அமுல்படுத்தப்பட்டதாகவும், எனினும் இது தற்போது இலங்கை சட்ட அமைப்பின் ஒரு பகுதியாக மாறியுள்ளதாகவும் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், நாட்டில் எந்த கிளர்ச்சியும் வன்முறையும் இல்லாத போதிலும், இந்த சட்டத்தை செயல்படுத்துவதில் அரசாங்கத்திற்கு வேறு நோக்கம் உள்ளமை தெளிவாவதாக அதில் கூறப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் நிறைவேற்று அதிகாரத்திற்கு வழங்கப்பட்ட பரந்த அதிகாரங்கள் ஊடாக, நீதிமன்றத்திற்கு அறிவிக்காத சட்டவிரோத கைதுகள், தடுத்து வைத்து சித்திரவதைக்கு உட்படுத்துதல் மற்றும் குற்றச்சாட்டுகள் இன்றி பல்வேறு இடங்களில் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டல் ஆகியவற்றுக்கு வாய்ப்புகள் காணப்படுவதாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு நிவாரணம் வழங்க மூன்று பேர் கொண்ட குழுவை இலங்கை ஜனாதிபதி நியமித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள விடயமும் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை உட்பட உலகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை மனிதாபிமானக் கோட்பாடுகளுக்கு முரணான விதிமுறைகளைக் இந்த சட்டம் கொண்டிருப்பதால், பல சமயங்களில் இந்தச் சட்டத்தைத் மீளமைக்க வேண்டியதன் அவசியத்தை இலங்கை அரசாங்கம் கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளது.

இதற்கமைய 21.01.2021 மற்றும் 12.02.2021 திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு மூலம் உச்சநீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.டி.நவாஸ் தலைமையில் மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவை இலங்கை அரசு நியமித்துள்ளதோடு, அதன் இடைக்கால அறிக்கை 20.0%.2021 அன்று ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டதாக சட்டத்தரணி சேனக பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், இடைக்கால அறிக்கை அல்லது அமைச்சரவை உபகுழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் இதுவரை செயற்படுத்தத் தவறியுள்ளதாக சட்டத்தரணி குற்றம் சாட்டியுள்ளார்.

அரசாங்கம் ஒத்திவைத்தல் கொள்கையை தொடர்ந்து பின்பற்றுவதால், கைதிகள் தமது வாழ்நாளை இழக்க நேரிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நாடு திரும்பிய சாதனை வீரர்களுக்கு

**நேற்று மாலை 4.20 மணியளவில் அவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.**

**இவர்களுக்கு விமான நிலையத்தில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டுள்ளது. மேலும் இவர்களை வரவேற்பதற்கு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ச மற்றும் விளையாட்டு அமைச்சின் மூத்த அதிகாரிகள் குழுவினர் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகைத்தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.**

## முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் பசில்

நேற்று நடைபெற்ற நிதி சட்டமூல வாக்கெடுப்பின் பின் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் ,

இன்று ஒரு கிலோ சீனியை பெற சதோச முன்னால் நூற்றுக்கணக்கான மக்கள் பல மணிநேரம் வரிசையில் நிற்கின்றனர்.நூறு ரூபாவை சேமிக்கவே இவ்வாறு கொரோனா தொற்றையும் கவனிக்காமல் வரிசையில் நிற்கின்றனர்.இதுவே இந்நாட்டு மக்களின் தற்போதைய பொருளாதார நிலை.

ஆனால் மறுபக்கம் போதை பொருள் வியாபாரிகள், பாதாள குழு உறுப்பினர்கள், மோசடி செய்யும் வர்தகர்கள் மறைத்து வைத்திருக்கும் கருப்பு பணங்களை வெள்ளையாக மாற்ற வழிவகுக்க இன்று அரசாங்கம் சட்டமூலத்தை நிறைவேற்றியுள்ளது.

நூறு ரூபாயை சேமிக்க வரிசையில் நிற்கும் அப்பாவி பொதுமக்கள் ஒருபுறம். நூறு கோடி கோடி ரூபாயை பதுக்கிய கொள்ளையர்கள் ஒரு புறம்.இதுதான் இன்று நாட்டில் உள்ள சமூக நீதி.இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளதால் சமூக நீதி மீறப்பட்டுள்ளது.

இருபதாம் திருத்த சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்த பின்னர் நடைபெற்ற எந்தவொரு வாக்களிப்பிலும் கலந்துகொள்ளாத முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் இச்சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.அவர்களின் தலைவர் எதிராக வாக்களித்துள்ளார்.

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச இச்சட்டமூலத்தை சமர்ப்பித்தால் அவரை எதிர்க்க முடியாமல் ஆதரவாக வாக்களித்துள்ளனர். ஆகவே இவர்கள் இப்பொழுது பாராளுமன்ற உறுப்பினர் ஹக்கீமின் கட்டுபாட்டில் இல்லை முழுமையாக பசில் ராஜபக்சவின் கட்டுபாட்டிலயே உள்ளது தெளிவாக புலனாகிறது.

இதனால் இவர்கள் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் என்பதை விட பசில் காங்கிரஸ் உறுப்பினர்களாகவே செயற்படுகின்றனர் என தெரிவித்தார்.

## துப்பாக்கியால் இருவர் மீது சரமாரி

அவசர தேவை கருதி தாண்டியடி எரிபொருள் நிலையத்தில் தனது ஊந்துருளிக்கு எரிபொருள் நிரப்பி விட்டு வீடு திரும்பிய இரு சகோதரர்கள் மீதே மோட்டார் வாகனத்தை நிறுத்தி துப்பாக்கியால் சரமாரியாக முகத்தில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது காயமடைந்த இருவரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கண் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தபட்டு முகத்தில் பல தையல்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

தினேஷ் 8656 எனும் இலக்கம் உடைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே தாக்குதல் மேற்கொண்டுள்ளதாகவும், நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான சம்பவங்கள் பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு, கிழக்கில் சடலங்களை தகனம்

நாடாளுமன்றில் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் நேரடியாக குறித்த முறைப்பாட்டினை அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்திருந்தார்.

கொரோனா தொற்றினால் ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் குறிப்பிட்ட நேரத்திற்குள் உடல்களை தகனம் செய்வதற்கு போதியளவு வழம் இல்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை யாழ்ப்பாணம் சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள தமிழ் பேசத் தெரியாத சிறைச்சாலை அதிகாரிகள் விவகாரம் குறித்தும் நிதியமைச்சர் ஆராய வேண்டும் என்றும் சுமந்திரன் கேட்டுக்கொண்டார்.






## சுதேச வைத்தியர்களுக்கு நியமனங்களை வழங்குங்கள்

**தொடர்ந்தும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;**

**ஆயுர்வேத, சித்த, யுனானி வைத்திய துறைகளில் பட்டம் பெற்று உள்ளக பயிற்சிகளை நிறைவு செய்த 1000 வைத்தியர்கள் கடந்த 2017 ஆம் ஆண்டில் இருந்து அரச நியமனம் கிடைக்காமல் வேலைவாய்ப்பற்ற நிலையில் வீட்டில் இருக்கும் துர்ப்பாக்கிய நிலை நம் நாட்டில் மட்டும் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.**

**தற்போதைய கொரோனா இடர் காலத்தை கருத்தில் கொண்டு சுகாதார துறையை வலுப்படுத்த வேலையற்ற சுதேச வைத்தியர்களுக்கு அரச நியமனம் வழங்கி கொரோனா சிகிச்சை நிலையங்களில் சேவையாற்ற வழி செய்வதே அரசின் புத்திசாலித்தனமானதும் ஆரோக்கியமானதுமான முடிவாகும் என நினைக்கிறேன்.**

**மேலும் இது தொடர்பாக சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் கௌரவ சிசிர ஜயகொடி அவர்களுடன் பல முறை பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டும் அது பலனளிக்கவில்லை. மற்றும் அதிமேதகு ஜனாதிபதி மற்றும் பிரதம மந்திரி ஆகியோரின் அலுவலகங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டும் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை. மாறாக அலோபதி துறையில் உள்ளக பயிற்சியை தொடங்காத மாணவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருப்பது மிக்க வேதனை அளிக்கிறது.**

**நாட்டு மக்களின் வரிப்பணத்தில் இலவச கல்வியை கற்று சுகாதார துறையில் தேர்ச்சி பெற்ற வைத்தியர்களாகிய எமக்கு உடனடியாக அரச நியமனம் வழங்கி நாட்டு மக்களுக்கு புத்துணர்ச்சியுடன் சேவையாற்ற உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.**

## மட்டக்களப்பில் மேலும் இருவர் உயிரிழப்பு 206 பேருக்கு கொவிட்

வைத்தியர் நா.மயூரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர், வவுணதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர் உட்பட இருவர் கடந்த 24 மணித்தியாலயத்தில் உயிரிழந்த நிலையில் மாவட்டத்தில் கோவிட் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை 248ஆக அதிகரித்துள்ளது.

அதேவேளை களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 50 பேருக்கும், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 73 பேருக்கும், செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 30 பேருக்குமென 206 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அதிகூடியதாக 55 பேரும், காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 35 பேரும் இதுவரை மரணமடைந்துள்ளனர்.

கடந்த மாதத்தில் 7959 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டதுடன் கடந்த வாரத்தில் 1414 பேருக்கும் தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

நாளாந்தம் 200இற்கு மேற்பட்ட தொற்றாளர்களும் 5 மேற்பட்ட உயிரிழப்பும் இடம்பெறுகின்றதுடன் தொடர்ந்து 2013 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் 1600 பேர் வீடுகளில் வைத்து பராமரிக்கப்படுகின்றனர் என குறிப்பிட்டுள்ளார்.

## தமிழர்களை ஒடுக்க கொண்டுவரப்பட்டது இன்று சிங்களவர்களுக்கு

சிங்கள பௌத்த பேரினவாத காலனித்துவ ஆதிக்க ஒடுக்கு முறைகளுக்கு எதிராக ஜனநாயக ரீதியிலும், ஆயுத ரீதியிலும் போராடும் போதுஅதனை ஒடுக்குவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட அவசரகால சட்டம் 30 ஆண்டுகளாக தமிழர்களை வேட்டையாடியது.

எங்களின் பெண்களை சித்திரவதை செய்வதற்கும், எங்களின் இளைஞர்களை கேட்பாரின்றி கொலைசெய்வதற்கும் எங்களது தேசத்தின் செல்வங்களை கொள்ளையடித்து தென்னிலங்கைக்கு கொண்டு வரவும்அந்த அவசரகால சட்டத்தை கொண்டு வந்தீர்கள் என்றார்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர் குளத்திற்கு கீழ் 178 ஏக்கரில் விவசாய காணி 72 ஆம்ஆண்டு முதல் உறுதிகள் வழங்கப்பட்டு விவசாயிகளினால் விவசாய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. அந்த விவசாய நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துமாறு பௌத்த பிக்கு ஒருவர் ஜனாதிபதி செயலகத்திற்கும், முல்லைத்தீவு வன இலாக்காவுக்கும் அழுத்தம் கொடுக்கப்படுகின்றது.

அதேபோன்று மயிலத்தமடுவில் இந்த வருடம், ஆகஸ்ட் மாதத்தில் இருந்து சிங்கள மக்கள் வெளியேறுவார்கள்என்று அறிவித்தல் ஒட்டப்பட்டிருந்தது. ஆனால் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் அவர்கள் விலகி விடுவார்கள்என்று தெரிவித்திருந்தார். ஆனால் அங்கு மக்களின் மாடு வளர்ப்பு நடவடிக்கைகளை தடுக்கும் வகையில், மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் அந்தக் காரியத்தை செய்கின்றனர். ஆகவே அதுஉடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

## நாடு மோசமான நிலையில் ஒத்துழைக்க முன்வாருங்கள்

**ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாவும் அவர் கூறினார்.**

**கொவிட் தொற்று பரவலினால் ஏற்பட்ட நெருக்கடிகள் மட்டுமல்ல கடந்த காலங்களில் கையாளப்பட்ட பொருளாதார செயற்பாடுகள் காரணமாக ஏற்பட்ட விளைவாகும்.நாட்டின் வருமானத்தை விடவும் செலவுகள்அதிகரித்து சென்றுள்ளது.ஒரு இரு வருடங்களில் இருந்தல்ல ஒரு இரு தசாப்தங்களுக்கு முன்பிருந்தே இந்தநிலைமை ஏற்பட்டுள்ளது.நாட்டுக்கு கிடைக்கும் வருமானம், அரசுக்கு கிடைக்கும் வருமானம் என்பனவற்றை நாட்டின் செலவுடன் ஒப்பிடுகையில் நாட்டின் வருமானம் மிகக் குறைவாகவே உள்ளது. ஒரு சில நேரங்களில்அனாவசிய செலவுகள், வீண் விரயம், ஊழல் என்பனவும் உள்ளதென்பது எமக்கு தெரியும். நீண்ட காலமாகஇவை இடம்பெற்றவை என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். எனவே உண்மையாக இந்த செலவுகளைகுறைக்க முடிந்த நடவடிக்கைகளை எடுப்போம எனவும் அவர் கூறினார்.**

**மேலும் கொவிட் நிலைமைகள் காரணமாக எமக்குக் கிடைக்கவிருந்த வருமானமும் கிடைக்காது போயுள்ளது. கொவிட் நிலைமைகள் காரணமாக இந்த ஆண்டில் மாத்திரம் நாம் எதிர்பார்த்ததை விடவும் 15001600 பில்லியன் ரூபா குறைவாகவே கிடைத்துள்ளது. குறிப்பாக நிதி அமைச்சின் கீழுள்ள மூன்று பிரதானநிறுவனங்கள் மூலமாக எமக்கு வருமானம் கிடைக்கின்றது. அதில் ஒன்றே சுங்கம், சுங்க திணைக்களத்தின்மூலமாக வெளிநாட்டில் இருந்து வரும் பொருட்கள் மூலமாக குறிப்பாக வாகனங்கள் இறக்குமதியில் அதிகவருமானம் கிடைத்தது. ஆனால் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக வாகன இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளது என்றார்.**

## அரிசி, சீனிக்கு அவசரகால சட்டம் என்றால் யுத்தம் ஏற்பட்டால்

சட்டமூலத்தின் ஊடாக நடக்கவுள்ளது.

வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள பணத்தை அங்கேயே முதலீடு செய்து அந்த பணத்திற்கு இங்கு சட்ட அந்தஸ்தை பெற்றுக்கொள்ளலாம். இங்கு சட்டப்படி வணிகம் செய்து முறையாக நடப்பவர்களுக்கு இது தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தும் நிலைமை ஏற்படலாம்.

இங்கு இப்படி செய்கையில் பாகிஸ்தானில் இதுபோன்று சட்டவிரோத பணத்தை வைத்திருப்பவர்களை சிறையில் அடைக்கின்றனர். அப்படி இங்கு செய்தால் அரசியல் தலைவர்கள் மீது நம்பிக்கைக்கொள்ள முடியும்.

இதேவேளை அவசரகால சட்டம் தொடர்பில் கூறுவதானால் இந்த நாட்டில் சட்டம், ஒழுங்கை பேணுவதற்கே அவசரகால சட்டம் இதுவரையில் கொண்டு வரப்பட்டது. ஆனால் இப்போது அரிசி, சீனி கொள்ளையை தடுக்க அவசரகால சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன்மூலமே அத்தியாவசிய பொருட்களை விநியோகிக்க முடியுமென்று கூறுகின்றனர். இதனை நம்ப முடியாது. நுகர்வோர் சட்டங்கள் இருக்கும்போது, அவசரகால சட்டம் அவசியமற்றது.

இந்த விடயத்திற்கு அவசரகால சட்டத்தை கொண்டு வருகின்றீர்கள் என்றால் யுத்தம் ஏற்பட்டால் என்ன செய்வீர்கள் என்று தெரியவில்லை. அப்போது அதிகாரத்தை கைப்பற்றும் புதிய சட்டங்களை கொண்டு வருவதற்கு தேடி அலைய வேண்டி வரலாம்.

மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் மக்களை அடக்குவதற்கே இந்த அவசரகால சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இப்போது மக்கள் புதிதாக சிந்திக்க தொடங்கியுள்ளனர். அவர்கள் சிறைச்சாலைகளுக்கு பயமில்லை. அங்கு செல்ல அவர்கள் தயாராக இருக்கின்றர். இளைய தலைமுறை சட்டத்திற்கு மதிப்பளிப்பதை தவிர, அதிகாரத்தை தவறாக பயன்படுத்தும் அதிகாரிகளுக்கு கௌரவமளிக்க தயாராக இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

## கிழக்கு மாகாணத்திலிருந்து மாலைதீவுக்கு அள்ளிச்செல்லப்படும்

வெளியிட்டார். குறிப்பிட்ட சில குழுவினரால், ஸ்ரீலங்காவின் கிழக்கு மாகாணத்திலிருந்து பெருமளவு மணல், மாலைதீவில் அமைக்கப்பட்டு வருகின்ற புதிய தீவிற்கு கொண்டுசெல்லும் முயற்சிகள் தொடர்ந்த வண்ணம் இருப்பதாக சபையின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

இந்த கடத்தல் செயற்பாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் ஒருவரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர் ஒருவரும் தொடர்புபட்டிருப்பதாகவும், அதேபோல கிழக்கு மாகாண ஆளுநரான அநுராதா யஹம்பத்தும் இதற்கு ஒத்துழைத்து வருவதாகவும் சாணக்கியன் குற்றஞ்சாட்டினார்.

இவ்வாறான கடத்தல் செயற்பாடுகள் காரணமாக ஸ்ரீலங்காவுக்குக் கிடைக்கவிருந்த பெருமளவு அமெரிக்க டொலர் வருமானம் இல்லாமல் போவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். அத்துடன் அரச தரப்பினரே இன்று அரசாங்கத்தை மதிக்காமல், சட்டத்திற்கு முரணான செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த விடயம் குறித்து சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் கவனத்திற்கு எடுத்துச்சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் அமைச்சரும், ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவுமான ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, இது சம்பந்தமாகபதிலளிக்க அவகாசத்தைக் கோரினார்.

# கல்முனை மாநகர நீரோடும் வடிகான்களில் தேங்கியுள்ள மண் குப்பைகள் அகற்றும் செயற்திட்டம்

**(பாறுக் ஷிஹான்)**

கொரோனா அனர்த்த நிலைமையினை அடுத்து நாட்டில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள பொதுமுடக்கத்திலும் கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட நீரோடும் வடிகான்களில் தேங்கியுள்ள மண் குப்பைகள் அகற்றும் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தினமும் பகலும் இரவு வேளையிலும் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபையின் வேலைப்பிரிவு சுகாதார பிரிவு மற்றும் திண்மக்கழிவகற்றும் பிரிவு என்பன துரிதமாக செயற்பட்டு வருகின்றன.

கனரக வாகனத்தின் உதவியுடனும் வடிகான்களில் நீண்ட காலமாக தேங்கி காணப்பட்ட கழிவுகள் விரைவாக அகற்றப்பட்டு வருகின்றன.





எதிர்வரும் பருவகாலம் ஆரம்பமாக உள்ளமையினால் மழை நீர் வடிந்தோடி கடல் ஆறுகளை அடைவதற்கு ஏற்பாடு செய்யும் வகையில் இச்செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வாறு வடிகான்களில் இருந்து அகற்றப்படும் மண்உள்ளிட்ட திண்மக்கழிவுகள் மாநகர பகுதிகளில் சீரற்றுள்ள பாதைகளை செப்பனிடுவதற்காக கொண்டு செல்லப்பட்டு நிரப்பப்பட்டு வருகின்றன.

கொரோனா அச்சுறுத்தலும் மாநகர சபை ஊழியர்கள் இச்செயற்பாட்டினை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் அறிவுறுத்தலுக்கமைய மாநகர ஆணையாளர் எம்.சி.அன்சாரின் வழிகாட்டலில் மாநகர சபை பிரதம சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் அர்சாத் காரியப்பர் நெறிப்படுத்தலில் இப்பணிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டுள்ளனர்.

மேலும் இச்செயற்பாடு கல்முனை மாநகர சபைக்கு சொந்தமான பொதுச் சந்தையை சூழவுள்ள வடிகான்கள் கல்முனை நற்பிட்டிமுனை மருதமுனை சாய்ந்தமருது உள்ளிட்டஅபகுதிகளில் உள்ள வடிகான்களில் தேங்கியுள்ள கழிவுகளும் விரைவாக துப்பரவு செய்யப்பட்டு வருகின்றன.

# குடும்பநல உத்தியோகத்தர்களிற்கான மேலதிக நேர கொடுப்பனவு கோரி மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம்



**(வாஸ் கூஞ்ஞ)**

குடும்பநல உத்தியோகத்தர்களிற்கான மேலதிக நேரக் கொடுப்பனவானது ஏனைய மாவட்டங்களில் வழங்கப்படுகின்றபோதும் வடக்கு மாகாணம் இவ் உத்தியோகத்தர்களுக்கு இவ் மேலதிக கொடுப்பனவை வழங்கப்படுவதில்லையென சுமார் 90 ஊழியர்கள் மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டத்தில் குதித்தனர்.

செவ்வாய்க்கிழமை காலை 09 மணி தொடக்கம் இரு மணி நேரம் இவ் கவனயீர்ப்பு போராட்டம் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன்பாக இடம் பெற்றது.

இவ் கவனயீர்ப்பு போராட்டத்தின் போது இவர்கள் தங்கள் கரங்களில் ஏந்திருந்த பதாதைகளில் ?ஏனைய மாகாணங்களில் மேலதிக நேரக் கொடுப்பனவு தொடர்ச்சியாக வழங்கப்படும்வேளையில் வடக்கில் மட்டும் மறுப்பதேன்?

எங்களது பயண கொடுப்பனவுகளை வரையறை அற்றதாக வழங்கவும்?

கௌரவ ஆளுநரே வெளிக்களம் செல்லும் எமது குடும்ப நல உத்தியோகத்தரின் உரிமைகள் சுரண்டபடுவதேன்?

காலை 4 மணி தொடக்கம் இரவு 10 மணி வரை எங்கள் சேவைகளை வழங்கியும் எங்களது கொடுப்பனவுகளை வழங்காதது ஏன்? ?போன்ற வாசகங்களை கொண்ட பதாதைகளை இவர்கள் எந்தியவர்களாக தங்கள் கவனயீர்ப்பு போடராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து வடக்கு மாகாண ஆளுநருக்கும் மற்றும் வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கும் தங்களது மகஜர் கிடைக்ககூடிய விதமாக மன்னார் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் த.வினோதனிடம் கையளித்தனர்.

இவ் கவனயீர்ப்பு போராட்டம் மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை வளாக முன்றலில் இடம்பெற்றது

தாங்கள் தங்கள் பணியுடன் இவ் கொவிட் தொற்று சம்பந்தமான பணிகளிலும் மேலதிகமான பணிகள் செய்கின்றபோதும் தங்களுக்கு இதற்கான மேலதிகமான கொடுப்பனவு வழங்க வேண்டும் என்பதே இவ் போராட்டம் இது தொடர்பாக வட மாகாண பிரதம செயலாளருக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக மகஜர் அனுப்பியுள்ளார்.

# குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுக்கு விண்ணப்பித்தும் கிடைக்கப்பெறவில்லை

## பணிப்பாளர் த.வினோதன்

**(வாஸ் கூஞ்ஞ)**



மன்னார் மாவட்டத்தில் குடும்பநல உத்தியோகத்தர்கள் இந்த கொவிட் 19 தொற்றுக் காலப் பகுதியில் தங்கள் கடமைகளுக்கு அப்பால் மேலதிகமான கடமைகளையும் செய்து வருகின்றனர். இவர்களுக்கான இவ் கொடப்பனவுக்காக கடந்த பெப்ரவரி மாதம் தொடக்கம் நாம் விண்ணப்பித்து வருவதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் த.வினோதன் இவ்வாறு தெரிவித்தார்.

குடும்பநல உத்தியோகத்தர்களிற்கான மேலதிக நேரக் கொடுப்பனவானது ஏனைய மாவட்டங்களில் வழங்கப்படுகின்றபோதும் வடக்கு மாகாணம் இவ் உத்தியோகத்தர்களுக்கு இவ் மேலதிக கொடுப்பனவை வழங்கப்படுவதில்லையென மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது. செவ்வாய்க்கிழமை காலை 09 மணி தொடக்கம் இரு மணி நேரம் இவ் கவனயீர்ப்பு போராட்டம் மன்னார் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனைக்கு முன்பாக குடும்பநல உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து வடக்கு மாகாண ஆளுநருக்கான மகஜரை மன்னார் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் த.வினோதனிடம் கையளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் த.வினோதன் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்

குடும்பநல உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளுக்கு அப்பால் மேலதிகமாக இக்காலத்தில் நிலவிவரும் கொவிட் தடுப்பூசி வழங்கும் செயல்பாட்டிலும் இவர்கள் இங்கு ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் ஒரு நாளைக்கு தங்களின் சாதாரண கடமைகளை விட ஐந்து அல்லது ஆறு மணித்தியாலங்கள் தங்கள் கடமைகளை மேலதிகமாக செய்து வருகின்றனர். இவர்களுக்கு இந்த மேலதிக கொடுப்பனைவை வழங்குவதற்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் அனுமதியே கிடைக்க வேண்டியுள்ளது.

இதற்கான அனுமதி கோரி நாங்கள் கடந்த பெப்ரவரி மாதம் தொடக்கம் விண்ணப்பித்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இன்னும் இதற்கான அனுமதி எமக்கு கிடைக்கப்பெறவில்லை.

இருந்தும் தற்பொழுது இவர்களால் தற்பொழுது வழங்கப்பட்டிருக்கும் இந்த கோரிக்கையை தான் உடன் வடக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள இருக்கின்றேன் என இவ்வாறு தெரிவித்தார்.

# அதிபர்,ஆசிரியர்களின் போராட்டம் தொடரும்

## ஆசிரியர் விடுதலை முன்னணி

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

அதிபர்,ஆசிரியர்களின் போராட்டங்களின் நியாயப்பாடுகளை முழுமையாக விளங்கிக் கொண்டும் அரசு இழுத்தடிப்புச் செய்வதை நாம் ஏற்றுக்கொள்ள போவதில்லை. சுபோதினி அறிக்கையை நடைமுறைப் படத்துவதாக அறிவிக்கும் வரை எமது போராட்டம் ஓய்வடையாதென ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் என்.டி.எஸ்.நாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்;

அதிபர்,ஆசிரியர் சேவையை வரைவிடப்பட்ட சேவையாக அமைச்சரவை அறிவித்துள்ளமைக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம். எனினும் கூட்டிணைந்த தொழிற்ச்சங்கங்கள் கடந்த இரு



மாதங்களாக மேற்கொண்டு வரும் போராட்டத்துக்கான ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வொன்றை முன்வைக்க வேண்டுமென்றே நாம் எதிர்பார்த்தோம்.

5000 ரூபா இடைக்கால கொடுப்பனவோ அமைச்சரவை தீர்மானித்த சம்பள தொகையை நான்கு கட்டங்களாக வழங்குவதோ எமது போராட்டங்களுக்கான தீர்வாக அமையாது.

நாங்கள் சம்பள உயர்வை கேட்கவில்லை. 199%ம் ஆண்டிலிருந்து எம்மிடமிருந்து அறவிட்ட தொகையையே கேட்கின்றோம்.

24 வருடங்களாக மாதாந்தம் தலா 30 ஆயிரம் வீதம் கொள்ளையிடப்பட்டுள்ளது. எமது சம்பள முரண்பாட்டை நீக்கி எமது சேவையை கௌரவப்படுத்துங்கள். யானைப் பசிக்கு சோளப் பொரிப்போல் வெறும் கண்துடைப்பு வேலையொன்றையே அமைச்சரவை உபகுழு அறிவித்துள்ளது. சுபோதினி சம்பள முரண்பாட்டு அறிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களே தொழிற்ச்சங்கங்களின் கோரிக்கைகள் எனத் தெரிந்திருந்தும் அதன் நியாயபாடுகளை விளங்கியும் கண்மூடித்தனமான அறிவிப்பொன்றை அமைச்சரவை உப குழு விடுத்திருப்பதை ஏமாற்று வேலையாகவே பார்க்க முடிகின்றது. எமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டங்கள் தொடரும். கூட்டிணைந்த தொழிற்ச்சங்கங்களின் உத்தியோகபூர்வ அறிவிப்புவரும் வரை தொடர்ந்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அனைவரினதும் கடப்பாடாகும்.

தொழிற்சசசங்கங்களின் பிரதிநிதிகள் ஆசிரியர் சமூகத்தின் விடிவுக்காக இரவு,பகல் பாராது செயற்படுவதை நாம் உணர வேண்டும். இது தனிப்பட்ட பிரச்சினையல்ல. கூட்டிணைந்த முன்னெடுப்பு எனவே இவ் விடயத்தில் சகல அதிபர்,ஆசிரியர்களும் மிக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். தற்போது வழங்கி வரும் ஆதரவைத் தொடர்ந்தும் வழங்க முன்வரவேண்டும் என்றார்.

# 350 மூடைகள் யூரியா உரம் மீட்பு

**(பாறுக் ஷிஹான்)**

350 மூடைகள் யூரியா உள்ளிட்ட உர மூடைகளை அத்தியாவசிய சேவைகள் என்ற பெயர் பலகை இடப்பட்ட லொறி ஒன்றில் கடத்திய இருவரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை (07) மாலை அம்பாறை பொலிஸ் விசேட பிரிவின் புலனாய்வு தகவலுக்கமைய சம்மாந்துறை பொலிஸார் பசளைகளை கடத்தி சென்ற இருவரை கைது செய்ததுடன் லொறியுடனான 350 உர மூடைகளையும் மீட்டுள்ளனர்.

எம்பிலிப்பிட்டிய பல்லேகம பிரதேசத்தில் இருந்து அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரதேசத்த்திற்கு எடுத்து செல்லப்பட்ட 350 உர மூடைகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது.இதன் போது லொறியில் பயணம் செய்த சாரதி மற்றும் நடத்துனர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 350 உர மூடைகளையும் லொறியையும் கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட யூரியா உள்ளிட்ட உர வகைகள் லொறி மற்றும் கைது செய்யப்பட்ட இருவர் தொடர்பான மேலதிக விசா



ரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# டயர் வெடித்ததால் தடம்புரண்ட லொறி வீதியில் புரண்டோடிய தார்பூசணிகள்



**(நூருள் ஹுதா உமர்)**

கல்முனை பாண்டிருப்பு பிரதேசத்தில் நேற்று இரவு 0%.15 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் வாகனத்தில் பயணித்த இருவரும் அதிஷ்டவசமாக தப்பிக்கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட ஓட்டமாவடி பிரதேசத்திலிருந்து அக்கரைப்பற்றை நோக்கி ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள 1%20 கிலோ கிராம் நீர் பூசணிக்காயை ஏற்றிக்கொண்டு வந்த லொறியே இந்த விபத்தில் சிக்கியது. பின்பக்க டயர் வெடித்தமையே விபத்துக்கான காரணம் என அறியப்பட்டுள்ளது.

ஸ்தலத்திற்கு விரைந்த கல்முனை போக்குவரத்து பொலிஸார் வாகனப் போக்குவரத்தை நிறுத்தி பிரதேச மக்கள் மற்றும் வீதிப்பயணிகளின் உதவியுடன் கவிழ்ந்து கிடந்த லொறியே நிமிர்த்தினர். சுமார் 20 நிமிடம் அளவில் வேகமாக செயற்பட்ட பிரதேசவாசிகள் குறித்த லொரியையும், வீதியில் விழுந்து கிடந்த நீர் பூசணியையும் மீட்டனர். இருந்த போதிலும் சுமார் 200 கிலோ அளவில் சேதமாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் யானைகளுக்கான தடுப்பு வேலிகள் அமைக்கும் வேலைத் திட்டம் ஆரம்பம்!!

**(மட்டக்களப்பு விசேட நிருபர்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த வருடத்திற்குள் 10%.5 கிலோமீட்டர்துாரத்திற்கு யானை தடுப்பு வேலிகள் அமைத்து யானைகள் கிராமங்களுக்குள் வருவதை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக வனஜீவராசிகள் திணைக்களம் கிரான், வாகரை மற்றும் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுகளில்



இந்த வேலிகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்;

கிரான் பிரதேசத்தில் 73 கிலோமீட்டர் தூர வேலியும், வாகரை பிரதேசத்தில் 18.5 கிலோமீட்டர் தூர வேலியும், செங்கலடி பிரதேசத்தில் 16 கிலோமீட்டர் தூர வேலியும் அமைக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

மொத்தத்தில் 83 கிலோமீட்டர் தூர வேலைகளுக்கான கேள்வி கோரப்பட்டு உரிய ஒப்பந்தக்காரர்களிடம் வேலைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வருட இறுதிக்குள் அதனை பூர்த்தி செய்யநடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


Sj SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


SwissLife Select
சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch


Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில் நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59



# முதலாவது டோஸ் தடுப்பூசி
## மக்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பு

(க.கிஷாந்தன்)



நுவரெலியா மாவட்டத்தில் மிக வேகமாக பரவிவரும் கொரோனா தொற்றினை கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசிகள் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகள் ஒரு சில பொது சுகாதார வைத்திய அதிகார பிரிவுகளில் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் தடுப்பூசி வழங்கும் செயத்திட்டத்திற்கமைய கொட்டகலை பொது சுகாதார வைத்திய அதிகார பிரதேசத்திற்குட்பட்ட மவுண்ட்வேர்ணன், போகாவத்தை ஆகிய இரண்டு கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு முதலாவது டோஸ் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு நேற்று திம்புள்ள தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

சீன தயாரிப்பான சினோபாம் தடுப்பூசியின் முதலாவது டோஸே இவ்வாறு ஏற்றப்பட்டது.

இப்பகுதி மக்களுக்கு தடுப்பூசி கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதன் பின் கொட்டகலை பிரதேச சபை தலைவர் ராஜமணி பிரசாத் இதனை கவனத்திற் கொண்டு உடனடியாக இப்பகுதிக்கு 3500 தடுப்பூசிகளை பெற்றுக் கொடுத்த நிலையில் இன்றைய தினம் அவ் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டமை குறிப்பிடதக்கது.

இதனை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து தடுப்பூசியை ஏற்றிக் கொண்டனர்.

# கல்முனையில் மீண்டும் தடுப்பூசி செலுத்தும் பணி
## பொது மக்கள்தடுப்பூசியினை பெற ஆர்வத்துடன் வருகை..!

(எம். என். எம். அப்ராஸ்)



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிரிவில் 30வயதுக்கு மேற்பட்டவர்களில் இதுவரையில் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்கள் மற்றும் முதலாவது தடுப்பூசி பெற்றவர்களுக்கான இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.

இந்நிலையில் கல்முனை தெற்கு சுகாதாரவைத்திய பிரிவில் 30 வயதிற்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் மீண்டும்மருதமுனை மற்றும் கல்முனை ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ. சுகுணனின் நெறிப்படுத்தலில் ,கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ. ஆர். எம் அஸ்மி தலைமையில் கல்முனை பிரதேசத்தில் அல் - பஹ்ரியா தேசிய பாடசலை மற்றும் அல்- அஸ்ஹர்வித்தியாலயத்திலும் ,மருதமுனை பிரதேசத்தில் அல் - மனார் மத்திய பாடசாலை மற்றும் அல்- மதீனா வித்தியாலயம் ஆகியவற்றில் கிராம சேவகர் ரீதியாக பிரிக்கப்பட்டு பொது மக்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்றது.

இதனடிப்பையில் கல்முனை அல் - அஸ்ஹர் வித்தியாலயத்தில் பொது மக்கள் ஆர்வத்துடன் வருகை தந்து சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தடுப்பூசியை இன்று (07)பெற்றுக் கொண்டனர்.

தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக அதிகாரிகள், மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ,பொதுசுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், செயலணி பயிற்சியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தடுப்பூசி கிடைக்கப் பெற்ற தன் அடிப்படையில்சுழற்ச்சி முறையில் கல்முனை தெற்கு சுகாதார பிரிவில் உள்ள ஒவ்வொரு பிரதேசங்களில் கிராம அலுவலர் ரீதியாக பிரிக்கப்பட்டு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை ஒழுங்கமைப்புக்கள் மிகவும் நேர்த்தியான முறையில் மேற்கொள்ளப்பட்டதை காணக்கூடியதாய் இருந்தது.

இதன் மூலம் சிரமமின்றி பொது மக்கள் மிகவும் இலகுவாக தடுப்பூசியினை பெற்றுக் கொண்டதுடன் சுகாதார துறையினருக்கு நன்றியினை தெரிவித்தனர்.

# ஆலையடிவேம்பில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு சினோபாம்
## 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு அஸ்டா செனிக்கா

(வி.சுகிர்தகுமார் )



ஆலையடிவேம்பில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான முதலாம் மற்றும் இரண்டாம் தடுப்பூசி ஏற்றலின் தொடர் சேவை இன்று முதல் ஆரம்பமானது.

இதன்போது சினோபாம் தடுப்பூசி வழங்கப்பட்டதுடன் 60வயதிற்கு மேற்பட்ட ஒரு தடுப்பூசியினையும் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு அஸ்டா செனிக்கா தடுப்பூசி ஏற்றப்படுவதாகவும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி திருமதி எஸ்.அகிலன் தெரிவித்தார்.

ஆலையடிவேம்பில் பிரதேசத்தில் இதுவரை 12500 இற்கும் மேற்பட்டவர்கள் முதலாவது தடுப்பூசியினை பெற்றுக்கொண்டுள்ள நிலையில் சுமார் 8000 ஆயிரம் வரையிலான மக்கள் இரண்டாவது தடுப்பூசியினை ஏற்றிக்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் இரண்டாம் தடுப்பூசி ஏற்றலின் தொடர் சேவை இன்று முதல் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி.சுகுணின் மேற்பார்வையில் கல்முனை பிராந்தியத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதன் பிரகாரம் இன்று 07ஆம் திகதி காலை 8 மணிமுதல் 1 மணிவரை கண்ணகிகிராமம் 1 2 ஆகிய பிரிவு மக்களுக்கு கண்ணகிகிராமம் கண்ணகி வித்தியாலயத்திலும் அது போல் இதுவரை தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத ஏனைய பிரிவு மக்களுக்கு காலை 8 மணிமுதல் 1 மணிவரை அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ண தேசிய பாடசாலையிலும் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதேநேரம் நாளை 08ஆம் திகதி காலை 8 மணிமுதல் 1 மணிவரை இதுவரை தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத ஏனைய பிரிவுகளுக்கு ஆலையடிவேம்பு திருநாவுக்கரவு வித்தியாலயத்திலும் , அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ண தேசிய பாடசாலையிலும் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆகவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தவறாது தடுப்பூசி ஒன்றினையும் பெற்றுக்கொள்ளாதவர்கள் தடுப்பூசியினை பெற்றுக்கொள்வதுடன் 60 வயதிற்கு மேற்பட்ட ஒரு தடுப்பூசியினையும் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு அஸ்டா செனிக்கா தடுப்பூசி வழங்கப்படுவதுடன் இவர்களுக்கான இரண்டாவது அஸ்டா செனிக்கா தடுப்பூசியும் சேகரித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தடுப்பூசியை பெற்றுக்கொண்டு கொரோனா தொற்று நோயிலிருந்து அனைவரும் விடுபட வழி சமைக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

# விவசாயிகளுக்கு சேதனப் பசளைக்காக 5000 ருபா ஊக்குவிப்பு கொடுப்பனவு



(வி.ரி.சகாதேவராஜா)

நாட்டிலே எதிர்வரும் பெரும்போக நெற்செய்கையில் சேதனப்பசளை மாத்திரமே பயன்படுத்தப்படவிருப்பதால் அதற்கான கொடுப்பனவாக ஏக்கர் ஒன்றுக்கு 5 ஆயிரம் ருபா வழங்கப்படவிருக்கிறது.

அதற்கான விண்ணப்படிவங்கள் நாடளாவியரீதியில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவை முறைப்படி நிரப்பப்பட்டு அவ்வப்பிரதேச கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்படவேண்டும் எனக் கேட்டகப்பட்டுள்ளது.

நெற்செய்கையை மேற்கொள்ளும் வயல்களின் பொருட்டு இயற்கைத்திண்ம தாவரப்போஷாக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு விண்ணப்பப்படிவம் -2021-2022 ஆண்டு பெரும்போகம் ''என விண்ணப்பபடிவத்திற்கு தலைப்பிடப்பட்டுள்ளது.

விவசாயிகள் அதனை உரியமுறையில் நிரப்பி இயற்கைத்திண்ம தாவரப்போஷாக்கு என்னால் உற்பத்திசெய்யப்பட்டு பாவிப்பதாக உறுதியுரைக்கின்றேன்'' என ஒப்பமிடவேண்டும்.

அப்படிவம் கமக்காரர் ஒழுங்கமைப்பு, அரசஉத்தியோகத்தர்/ கிராமசேவகர் , விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர், விவசாயப்போதனாசிரியர் ஆகியோர் சிபார்சுசெய்து பெரும்பாக உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

இம்மாதம் ஆரம்பக்கூட்டங்கள் இடம்பெற்று அடுத்தமாத முற்பகுதியில் விதைப்புவேலைகள் ஆரம்பமாகவுள்ள இந்தநிலையில் சேதனப்பசளைக்காக பிரஸ்தாப விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. ஒரு விவசாயி உயர்ந்தபட்சம் தனது 5ஏக்கர் நிலதிற்கு 25ஆயிரம் ருபா பெறமுடியும்.

இவற்றுக்கான 5ஆயிரம் ருபா கொடுப்பனவு அவரவர் வங்கிக்கணக்கில் சேர்க்கப்படுமெனத் தெரிகிறது. அதைக்கொண்டு சேதனைப்பசளையை உற்பத்திசெய்ய வேண்டும் அல்லது கொள்வனவு செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் சேதனப்பசளைகளை அரசாங்கம் கொள்வனவுசெய்யும் திட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளது.

# அட்டனில் இரண்டாம் கட்ட தடுப்பூசி



(க.கிஷாந்தன்)

நுவரெலியா மாவட்டத்தில் மிக வேகமாக பரவிவரும் கொரோனா தொற்றினைகட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசிகள் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகள் ஒரு சில பொது சுகாதார வைத்திய அதிகார பிரிவுகளில் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் அட்டனில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான முதலாம் கட்ட கொவிட் தடுப்பூசியைப் பெற்று கொண்டவர்களுக்கான இரண்டாம் கட்ட தடுப்பூசி 07.09.2021 அன்று வழங்கப்பட்டது.

ஜுலை 31ம் திகதி அட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு அட்டன் ஹைலன்ஸ் கல்லூரியிலும், ஆகஸ்ட் 02ம் திகதி அட்டன் ஈ.ஒ.ஙி. மண்டபத்தில் தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்களுக்கு டி.கே. டபிள்யூ மண்டபத்திலும் வழங்கப்பட்டது. மக்கள் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள மிகவும் ஆர்வமாக இருந்தனர்.

# பிந்திய இரவிலும் கல்முனையில் மக்கள் நலத் திட்டத்தில் களமிறங்கிய மாநகர சுகாதார தொழிலாளர்கள்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட கல்முனை பொதுச்சந்தை மற்றும் கல்முனை நகர்ப்பகுதியில் எதிர்வரும் கால நிலை மாற்றத்தை முன்னிட்டு சுத்திகரிப்பு நடவடிக்கைகளும் வடிகான் துப்பரவு செய்யும் வேலைத்திட்டமும் கல்முனை மாநகர சபை பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜெ.கே.அர்சத் காரியப்பரின் பணிப்புக்கமைய பிந்திய இரவு நேரம் வரை இடம்பெற்று வருகின்றது.

கல்முனை மாநகர சபை முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். ரக்கிப்பின் ஆலோசனைக்கமைய பொதுமுடக்க காலக் கட்டத்திலும் இடம் பெற்றுவரும் இந்த பணியானது மக்களுக்கு மிகவும் தேவையான ஒன்றாக உள்ளது. கடந்த 05 நாட்களாக மாலை 02 மணிக்கு ஆரம்பிக்கும் இந்த சுத்திகரிப்பு நடவடிக்கைகளும் வடிகான் துப்பரவு செய்யும் வேலைத்திட்டமும் இரவு 10 மணிவரை நடைபெறுவதாக வேலைத்தள மேற்பார்வையாளர் விக்னேஸ்வரன் தெரிவித்தார். மேலும் காலை வேளைகளில் ஊரின் மத்தியிலும் இரவு நேரங்களில் சந்தை கட்டிடம் அடங்களாக கல்முனை மத்தியிலும் இடம்பெறும் இந்த பணியின் போது வடிகான்களில் இருந்து அகற்றப்படும் மண்ணானது திண்மக்கழிவகற்றும் பிரதேச பாதைகளை சீரமைக்க பயன்படுத்தப்படுகிறது என்றார்.

மழைகாலம் வந்தால் 2 அடியளவில் வெள்ளநீர் தேங்கி நிற்கும் இந்த பிரதேசத்தில் இப்படியான பணியை அசாதாரண காலப்பகுதி என்று கூட பாராமல் முன்வந்து துப்பரவு செய்யும் கல்முனை மாநகர சுகாதாரப்பிரிவு ஊழியர்களுக்கும் திண்மக்கழிவகற்றும் ஊழியர்களுக்கும் இதுவரை எவ்வித கொரோனா பாதுகாப்பு அங்கிகளும் கல்முனை மாநகர சபையினால் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# வீரமா நகரைச் சேர்ந்த கர்ப்பவதி கொரோனாவுக்கு பலி

அ . அச்சுதன்

வீரமாநகர் , தோப்பூர் என்னும் முகவரியில் வசித்து வந்த சந்திரன் ராதா எனும் 32 வயதுடைய கர்ப்பவதியொருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகிய நிலையில் வெளியில் செல்லப் பயத்தில் வீட்டிலேயே தங்கியிருந்துள்ளார்.

நோயின் தாக்கம் அதிகரித்து சுயநினைவற்ற நிலையில் நேற்று முன்தினம் மூதூர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டதுடன் கந்தளாய் தள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

திங்கட்கிழமை (06) அதிகாலையில் சத்திர சிகிச்சையின் மூலமாக பிரசவம் நடைபெற்ற போதிலும் தாய் இறந்து விட்டார்.குழந்தை நலமாக இருக்கின்றது.குறித்த தாய்க்கு ஏற்கனவே நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர். கொரோணாத் தொற்றுத் தொடர்பான விளக்கமின்மை மற்றும் உரிய நேரத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கத் தவறியமை போன்ற காரணிகளினால் மரணம் சம்பவித்திருக்கின்றது.

# தடுப்பூசிகள் செலுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுப்பு

(எம்.ஏ.றமீஸ்)



அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இரண்டாம் கட்ட கொவிட் தடுப்பூசிகள் செலுத்தும் நடவடிக்கைகள் நேற்றைய தினமும்(07) வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டன.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்ட சுமார் நான்காயிரம் தடுப்பூசிகள் அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயப் பிரிவில் அமைக்கப்பட்ட ஐந்து மத்திய நிலையங்களில் செலுத்தும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.அகிலன் தலைமையில் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் இதுவரை இருபதாயிரத்திற்கு மேற்பட்டோருக்கு கொவிட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

முப்பது வயதிற்கு மேற்பட்ட பொதுமக்கள், கற்பிணித்தாய்மார்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், முன்னிலை உத்தியோகத்தர்கள் போன்றோருக்கு இத்தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன.

இதேவேளை, அட்டாளைச்சேனை பிரதேச செலயகப் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் உள்ள விஷேட தேவையுடையவர்கள், வயோதிப நோயாளர்கள் போன்றோருக்கு இராணுவத்தின் உதவியுடன் நடமாடும் கொவிட் தடுப்பூசிகள் செலுத்தப்படும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.




# ஊரடங்கு வேளையில் ஊருக்குள் புகுந்து யானைகள் அட்டகாசம்!

## காரைதீவில் நடுநிசியில் சம்பவம்;2 மணி நேரம் திகில்

(வி.ரி.சகாதேவராஜா)

ஊரடங்கு வேளையில் நள்ளிரவில் ஊருக்குள் புகுந்த யானைகள் பலத்த அட்டகாசம் செய்து பலத்த சேதங்களை ஏற்படுத்திச்சென்றன.

இச்சம்பவம் காரைதீவில் நேற்று முன்தினம் நடுநிசியில் இடம்பெற்றது. இதனால் நேற்று அதிகாலை வரை அங்கு பதட்டமும் பீதியும் நிலவியது.

முற்பகல் 2.10மணியளவில் ஊருக்குள் புகுந்த யானைகள் வீதியால் சென்றபோதும் அருகிலுள்ள கதவுகள் மதில்கள் அனைத்தையும் பதம்பார்த்துச் சென்றன.சிலரது வளவுக்குள்ளும் சென்றன.

மிகவும் உயரமான பாரிய யானையொன்றும் அதில் காணப்பட்டதால் மக்கள் மிகுந்த பீதியுடன் சுமார் இரு மணிநேரம் இரவைக்கழிக்க வேண்டியதாயிற்று.

இளைஞர்கள் சிலர் சேர்ந்து யானையை விரட்டியபோதும் மறுபக்கதால் மற்றுமொரு யானை புகுந்து அட்டகாசம் செய்தது. காரைதீவில் சனஅடர்த்திமிக்க முதலாம் இரண்டாம் பிரிவுகளில் யானைகளின் அட்டகாசம் இடம்பெற்றன.

பலரது மதில்கள் பிரதான வாசல் கேட்டுகள் பயிர்பச்சைகள் அனைத்தும் யானைகளின் தாக்குதலுக்கு இலக்காகின. எனினும் தெய்வாதீனமாக





உயிர்ச்சேதம் ஏற்படவில்லை.

வீதி மின் விளக்குகளின் வெளிச்சம் பகல்போல்இருந்ததால் பலரது வீடுகளிலிருந்த சிசிரிவி கமராக்களுள் யானைகளின் அட்டகாசமும் இளைஞர்கள் துரத்திச்செல்வதும் பதிவாகியிருந்தது. சில இளைஞர்கள் தமது கையடக்கதொலைபேசியில் படங்களை சிறைப்பிடிக்கவும் தவறவில்லை.

சுமார் இருமணிநேரம் மக்கள் பீதியுடன் உயிரைக் கையில்பிடித்துக்கொண்டு இரவைக்கழிக்கவேண்டியதாயிற்று. யானைகள் இறுதியில் அதிகாலை 4மணியளவில் வயல்பகுதிக்குச்சென்றதும் மக்கள் நிம்மதியடைந்தனர்.

# தம்பலகாமம் பிரதேச சபை ஆலோசனைக் கூட்டம்



(இஃஜாஸ் ஏ பரீட்)

திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகமம் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட முன்மொழிவு தொடர்பான ஆலோசனை கூட்டம் தவிசாளர் ஏ.ஜி.சம்பிக பண்டார அவர்களது தலைமையில் நேற்று முன்தினம் சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதேச சபை உறுப்பினர்கள், செயலாளர் மற்றும் ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதில் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக இங்கு ஆராயப்பட்டது.

# தோணிகளுக்குள் மறைத்து வைத்திருந்த 70 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்புடன் இருவர் கைது நள்ளிரவில் வாவி சுற்றிவளைப்பு



(ரீ.எல்.ஜவ்பர்கான்)

சட்டவிரோதமான முறையில் ஊரடங்குச் சட்ட நேரத்தில் விற்பனை செய்வதற்காக மட்டக்களப்பு முறக்கொட்டான்சேனை வாவியினுள் தோணிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 70000 ஆயிரம் மில்லி வீற்றர் கசிப்புடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து இரு தோணிகளும் மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி.பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் பணிப்புரையின் பேரில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பண்டாரதலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போது வாவியினுள் தோணிகளுக்குள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் கைது செய்யப்பட்ட நபர்களும் ஏறாவூர் நீதிமன்றத்தி ஆஜர் படுத்தப்படவுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# வருடாந்த மகோற்சவம் நடைபெறாது!



(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

வரலாற்று சிறப்புமிக்கதும், கிழக்கலங்கையின் தொன்மைமிகு கோவிலுமாக விளங்கும் சின்னக் கதிர்காமம் என்றழைக்கப்படும் திருகோணமலை வெருகலம்பதிசிறி சித்திர வேலாயுத சுவாமி தேவஷ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று இடம்பெறவிருந்த நிலையில் கொரோனா தொற்று நிலமை காரணமாக இவ்வருட மகோற்சவம் நடைபெறமாட்டாதென கோயில் நிருவாகம் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இவ் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோட்சவத்தில் நாட்டின் பல பாகங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான பக்த அடியார்கள் ஒவ்வொரு வருடமும் வருகை தருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மகிழடித்தீவில் இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பம்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)



மட்டக்களப்பு மாவட்டத்தில் 30வயதுக்கு மேற்பட்டவர்களில் இதுவரையில் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்கள் மற்றும் தடுப்பூசி பெற்றவர்களுக்கான இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரையில் உள்ள மக்களுக்குஇரண்டாம் கட்ட தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாகமுன்னெடுக்கப்படுவதுடன் இதுவரையில் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளாதவாகளுக்கும் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள்முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மண்முனை தென் மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் இதுவரையில் முதலாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள்இன்றைய தினமும் முன்னெடுக்கப்பட்டது.

மகிழடித்தீவு சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் இன்றைய தினம் இந்த தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

கர்ப்பிணிப்பெண்களும், விசேட தேவையுடையவர்களும் விசேடமாக தங்களுக்கான இரண்டாம் கட்ட தடுப்பூசிகளைப்பெற்றுக்கொண்டதுடன், இதுவரையில் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளாத 30 வயதுக்கு மேற்பட்டவர்களும் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டனர்.

மண்முனை தென் மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்டமகிழடித்தீவு,முனைக்காடு, முதலைக்குடா,பன்டாரியாவெளி, கற்சேனை, கொக்கட்டிச்சோலை, அரசடித்தீவு உட்பட பல பகுதிகளினை சேர்ந்தவர்கள் தங்களுக்குரிய இரண்டாம் கட்டதடுப்பூசிகளைப்பெற்றுக்கொண்டனர்.

# காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் கொவிட் சிகிச்சை நிலையத்துக்கு ஒக்சிஸன் கருவி கையளிப்பு



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு கல்லடி இராணுவ முகாம் 231 படைப்பிரிவின் பிரிகேடியர் கேர்ணல் துலிப் பண்டார காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.எஸ்.எம்.ஜாபீரிடம் இந்த ஒக்சிஸன் கருவி மற்றும் அதனோடு தொடர்புடைய கருவிகளையும் கையளித்தார்.

இந்த நிகழ்வு காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றது.

இதில் குருக்கள் மடம் இராணுவ முகாம் இணைப்பதிகாரி ஏ.எம்.டயபிள்யு.உதயகுமார மேஜர் வை.எம்.யு.வி.யாப்பா, கெப்டன் அத்துக்கொரல, இராணு சிவில் பாதுகாப்பு அதிகாரி உட்பட வைத்தியசாலை அதிகாரிகள் தாதியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது காத்தான்குடி ஆதார வைத்தியசாலை தொடர்பாகவும் கொவிட் சிகிச்சை நிலையம் தொடர்பாக மட்டக்களப்பு கல்லடி இராணுவ முகாம் 231 படைப்பிரிவின் பிரிகேடியர் கேர்ணல் துலிப் பண்டார காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.எஸ்.எம்.ஜாபீரிடம் கேட்டறிந்து கொண்டார்.

# அத்தியாவசிய பொருட்களை அரசின் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்வதனை உறுதிப்படுத்த விழிப்பூட்டும் நடவடிக்கை

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)



அத்தியாவசியப் பொருட்களை அரசின் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யப்படுவதனை உறுதிப்படுத்த விழிப்பூட்டும் நடவடிக்கை இன்றுமுதல் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரசினால் அத்தியாவசியப் பொருட்களுக்கான கட்டுப்பாட்டு விலை வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டதையடுத்து அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தும் விசேட கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன் தலைமையில் நேற்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது அரிசி ஆலைகள், பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத நெற்களஞ்சிய உரிமையாளர்கள், வியாபாரிகள் போன்றவர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை அரசின் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்வதை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் தொடடர்பாகவும் இதற்கான தொடர் செயற்றிட்டம் தயாரித்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அரசின் அவசரகாலச் சட்டத்திற்கமைவாக கட்டுப்பாட்டு விலையில் அத்தியாவசியப் பொருட்களை பொது மக்களுக்கு விற்பனை செய்யாமல் பதுக்கி வைத்திருப்பவர்களுக் கொதிராக நடவடிக்கை எடுப்பதற்கான மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் அறிவுறுத்தல் களுக்கமைவாக இச்செயற்பாடு முன்னெடுக்கப் படவுள்ளது.

இதுதவிர நெல்லை பதுக்கி வைத்திருப்பவர்கள், களஞ்சியப்படுத்தி வைத்திருப்பவர்களிடமிருந்து விவசாய நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாதவாறு அவற்றை நெற்சந்தைப் படுத்தும் சபை மூலம் கொள்வனவு செய்தல் அல்லது சட்டநடவடிக்கை எடுத்தல் போன்ற விடயங்கள் சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்காக நுகர்வோர் அதிகாரசபை, பிரதேச செயலாளர்கள், பொலிஸ் உட்பட நெல் சந்தைப்படுத்தும் அதிகார சபை அதிகாரிகள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் சகல வியாபார நிலையங்களிலும் அத்தியாவசியப் பொருட்கள் அரசின் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்தல், தட்டுப்பாடின்றி பொருட்களை விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைககளைக் கண்காணித்து விழிப்பூட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பிரதேச செயலாளர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

இவ்விசேட கூட்டத்தில் நுகர்வோர் அதிகார சபை உதவிப் பணிப்பாளர் ஆர்.எப். அன்வர் சதாத், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல். ஆர். குமாரசிறீ, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. சசிகலா புண்ணியமூர்த்தி, உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரன், பிரதேச செயலாளர்கள், நெற்சந்தைப்படுத்தல் அதிகார சபை, விவசாய திணைக்களம், மாவட்ட விவசாய திணைக்கள உயர் அதிகாரிகள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

### அம்பாறையில்..

# சதொச நிலையங்களிலும் அத்தியாவசியப் பொருட்கள் பதுக்கலா?

## முறைகேடுகள் தொடர்ந்தால் நடவடிக்கை என்கிறார் றிஸ்லி முஸ்தபா

(அஸ்லம் எஸ்.மௌலானா)

அம்பாறை மாவட்டத்திலுள்ள சதொச நிலையங்களில் அத்தியவசிய உணவுப் பொருட்கள் விற்பனையின்போது இடம்பெறும் முறைகேடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என பொதுஜன பெரமுன கட்சியின் கல்முனைத் தொகுதி அமைப்பாளரும் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை பணிப்பாளர் சபை உறுப்பினருமான றிஸ்லி மயோன் முஸ்தபா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இம்முறைகேடுகள் நிரூபிக்கப்படுமாயின் சம்மந்தப்பட்டோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

நாட்டில் தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கும் நிலையில், பொது மக்களுக்கு அத்தியவசிய உணவுப் பொருட்களை சதொச நிலையங்கள் மூலம் நிர்ணய விலையில் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

எனினும், அம்பாறை மாவட்டத்திலுள்ள சதொச நிலையங்கள் மூலமாக பொது மக்களுக்கு சரியான முறையில் இவ்வுணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படாமல், அவற்றைப் பதுக்கி வைத்து, மொத்த வியாபாரிகளுக்கும் தெரிந்தவர்களுக்கும் வழங்கப்படுவதாக பொதுமக்கள் தம்மிடம் முறைப்பாடு செய்து வருகின்றனர்.

கூடுதலான டின் மீன்கள், மைசூர் பருப்பு, பெரிய வெங்காயம், கோதுமை மா, பால்மா, அரிசி, சீனி போன்ற பொருட்கள், இந்த சதொச நிலையங்களுக்கு நாளாந்தம் வருகின்ற போதிலும், மக்களுக்கு நேரடியாக நிர்ணய விலையில் இப்பொருட்களை வழங்காமல், அவற்றை பதுக்கி வைப்பதும் மொத்த வியாபாரிகள் மற்றும் தெரிந்தவர்களுக்கு மாத்திரம் கொடுப்பதும் மக்களுக்கு செய்யும் மிகப்பெரும் அநீதியாகும்.

இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறுவது ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டால், உயர் அதிகாரிகள் மூலம் சம்மந்தப்பட்ட சதொச பொறுப்பாளர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
STRAVEL
Flugtickets | Hotels | Reiseversichenungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00
079 913 77 59


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


Call us now!
0791023193
0787437071
MON-FRI
11.30 - 23.30
SATURDAY
11.30 - 23.00
SUNDAY
11.30 - 18.00
GRUNAU 1
ASIANFOOD
RESTAURANT
STARTER
BBQ
GRILL-TANDOORI
SPECIAL NAAN
MIX SABJI
BIRIYANI SPL
CURRY DISHES
FISH SPL
DESERTS - ICE CREAM
COFFEE SPL
CALL WE DELIVER YOU - STAY HOME STAY SAFE
MEIERWISSENSTR 588064 ZURICH

# கிழக்கு மாகாண சுதேச மருத்துவ ஆணையாளர் போதுமக்களுக்கு விடுத்துள்ள விசேட அறிவித்தல்!

(அ.அச்சுதன் , பைஷல் இஸ்மாயில்)



கொவிட் 19 தொற்றாளர்களும், அதிக அறிகுறிகள் இல்லாதவர்களும் தங்களின் தனிமைப்படுத்தும் காலங்களை ஆயுர்வேத வைத்திய சிகிச்சைகளுடன், பாரம்பரிய உணவு முறைகளை பெற்றுக்கொண்டு பூரண சுகத்தை பெற்றுக்கொள்வதற்கான சகல வசதிகளையும் முற்றிலும் இலவசமாக திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள தள ஆயுர்வேத வைத்தியசாலைகளில் வழங்கப்பட்டு வருவதாக கிழக்கு மாகாண சுதேச மருத்துவத்திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் தெரிவித்தார்.

கொவிட் 19 தொற்றாளர்களும், அதிக அறிகுறிகள் இல்லாதவர்களும் தங்களின் தனிமைப்படுத்தும் காலங்களை மிக அவதானமாக கடைப்பிடிப்பதன் மூலம் இந்தத் தொற்றிலிருந்து எமது குடும்ப அங்கத்தவர்களையும், ஏனையவர்களையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

எனவே, இம் மாவட்டங்களில் உள்ளவர்கள் தங்களின் தனிமைப்படுத்தும் காலங்களை பாரம்பரிய உணவு முறைகள் அடங்கிய வைத்திய ஆலோசனைகள் அடங்கிய சிகிச்சைகளை முற்றிலும் இலவசமாக திருகோணமலை கப்பல்துறை தள ஆயுர்வேத வைத்தியசாலை, மட்டக்களப்பு தள ஆயுர்வேத வைத்தியசாலை, அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலை, கிண்ணியா நடுத்தீவு மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை போன்ற வைத்தியசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

அங்கு சீனிப் பரிசோதனை, குருதி அமுக்க பரிசோதனை, சுவாசப் பரிசோதனை உள்ளிட்ட பல வைத்திய பரிசோதனைகளுடன் சிகிச்சைகளும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக் கூடிய பாரம்பரிய உணவு வகைகளையும் நாளாந்தம் இலவசமாக வழங்கி வருவதாகவும் மேலும், திருகோணமலை மாவட்டத்திலுள்ளவர்கள் தங்களின் தனிமைப்படுத்தும் காலங்களை கப்பல்துறை தள ஆயுர்வேத வைத்தியசாலையில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 தொற்று தற்போது வேகமாக பரவி வருவதனால் பொதுமக்கள் தங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். எனவே, திருகோணமலை மாவட்டத்திலுள்ளவர்கள் தங்களினதும், தங்கள் குடும்பத்திலுள்ளவர்களின் உடல் ஆரோக்கியத்தை பேணிப் பாதுகாக்க திருகோணமலை மாவட்டங்களிலுள்ள பிரதேசங்களில் இருக்கின்ற ஆயுர்வேத வைத்திய பொறுப்பதிகாரி மற்றும் சமூக நல வைத்தியர்களை தொடர்பு கொண்டு கொவிட் 19 தொடர்பான வைத்திய ஆலோசனைகளுடன் அதற்கான சிகிச்சை முறைகளை முற்றிலும் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

திருகோணமலை மாவட்ட பிரதேசங்களிலுள்ள வைத்திய பொறுப்பதிகாரிகள் மற்றும் சமூக நல வைத்தியர்களின் தொலைபேசி இலக்கங்கள்,

திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரதேச செயலாளர் பிரிவு Dr.K.Niruba 0740037294, Dr. N.Subashini 0779749780, Dr. A.Ilankumaran 0740037282

குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவு - Dr. S.R.P.Rajeev 0740037290, Dr. S.Sathees 0740037251, Dr. R.Vaikalai 0774605627

கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவு - Dr. Prasadika Wijeyas-ekara 0717787101, Dr.Chamal Wijayasooriya 0714410301

மோறவேவா பிரதேச செயலாளர் பிரிவு - Dr. Kasundweera 0713406651

பதவிய ஸ்ரீபுர பிரதேச செயலாளர் பிரிவு - Dr. Jeyamal Indika Kumara 0710373003

கோமரங்கடவல பிரதேச செயலாளர் பிரிவு - Dr. Jeyamal Indika Kumara 0710373003

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவு - Dr. H.M.Haris 0772254232

தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவு - Dr. M.N.P.Mohanachandran 0752785468, Dr. J.Arunpalan 075340800

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவு - Dr. I.S.M.Riswan 0754381712, Dr.Mrs.M.F.Fahmitha 0778470575

சேருவில பிரதேச செயலாளர் பிரிவு - Dr. Erandi Jeyasinghe 0783521989

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவு - Dr. Y.M.Rishad 07197033878

# கிழக்கில் 12 ஆதார வைத்தியசாலைகளிலும் புதிதாக ஏஈக் ஆரம்பிப்பு!

## கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தௌபீ

(சகாதேவராஜா)



கிழக்கு மாகாண கொவிட் நிலைமையைக் கருத்திற்கொண்டு மாகாணத்திலுள்ள சகல 13 ஆதாரவைத்தியசாலைகளிலும் அதிதீவிரசிகிச்சை(ICU) பிரிவுக்கு மேலதிகமாக உயர் நிலை அவதானிப்பு பிரிவு (HDU High dependent unit) ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:

இப்புதிய பிரிவில் மிகவும் பாதுகாப்பாக நோயாளிகள் பராமரிக்கப்படுகின்ற அதேவேளை சுகாதாரத்துறையினரும் தொற்றலிருந்து பாதுகாக்கப்படுவர். சாதாரண விடுதி சிகிச்சைக்கும் (ward) அதிதீவிர சிகிச்சைப்பிரிவுக்கும் (ICU) இடைப்பட்ட ஒன்றாக அமையும். இங்கு நோயாளிகள் 24 மணிநேரமும் ஏனையோரில் தங்கிருப்பதால் பராமரிப்பு தொடர்ச்சியாகவிருக்கும்.

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை ,நிந்தவூர், பொத்துவில், திருக்கோவில் போன்ற ஆதாரவைத்தியசாலைகளில் இவ்வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### கொரோனா அதிதீவிர சிகிச்சைப்பிரிவு

இதேவேளை, கொரோனாவுக்கான அதிதீவிர சிகிச்சைப்பிரிவு(ICU) காத்தான்குடி ,களுவாஞ்சிக்குடி வாழைச்சேனை போன்ற ஆதாரவைத்தியசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற காரணங்களினால் கிழக்கில் கொரோனாத் தொற்றுவீதமும் மரணவீதமும் படிப்படியாக குறைந்துவருகின்றன.

தடுப்பூசிகள் வேகமாக ஏற்றப்பட்டுவருவதனாலும் மரணவீதம் குறைந்துவருவதை அவதானிக்கமுடிகிறது.

இறுதியாக இரண்டாவது டோஸ் ஏற்றியவர்களுக்கு அடுத்த 3 வாரங்களின் பின்னரே அது வேலைசெய்ய ஆரம்பிக்கும்.எனவே ஊசி போட்டுவிட்டோமென்று அலட்சியமாக கவனயீனமாக இருக்கவேண்டாம். சுகாதாரநடைமுறைகளை அனைவரும் தொடர்ச்சியாக பின்பற்றவேண்டும்.

# பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு கிடைத்துள்ள சர்வதேச அங்கீகாரம்




(ஏ.பி.எம்.அஸ்ஹர்)

Times Higher Education World Ranking 2022 தரப்படுத்தல் வரிசையில் உலகின் முதற்தர 500 பல்கலைக்கழகங்களில் ஒன்றாக

இலங்கையின் பேராதனைப் பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் தொடர்ந்து 3 ஆவது தடவையாகவும் முதற்தர 500 பல்கலைக்கழகங்களில் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதே வேளை இலங்கையின் பல்கலைக்கழக வரிசையில் முதலிடத்தையும் இப் பல்கலைக்கழகமே பெற்றுள்ளமையிம் விஷேட அம்சமாகும்.

# கந்தளாயில் 4,5000 தோன் நெல் மூடைகளை பதுக்கி வைத்திருந்த களஞ்சிய சாலைகளுக்கு சீல்





(எப்.முபாரக்)

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 4,5000 தொன் நெல் மூடைகளை பதுக்கி வைத்திருந்த களஞ்சிய சாலைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகளால் நேற்று கந்தளாய் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது மூன்று நெல் களஞ்சிய சாலைகளில் 4,5000 தொன் நெல்மூடைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் மூன்று நெல் களஞ்சியசாலைகளுக்கும் சீல் வைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபையின் திருகோணமலை பணிப்பாளர் கே.டி வசந்தன் தெரிவித்தார்.

சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது பொலிஸாரும் ஈடுபட்டதோடு,பதுக்கல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோருக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளதாகவும் திருகோணமலை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் பணிப்பாளர் கே.டி வசந்தன் தெரிவித்தார்.

# நோர்வூட்டில் கசிப்பு உற்பத்தி, மாணிக்கல் அகழ்வில் ஈடுப்பட்ட மூவர் போலிஸாரால் கைது

(க.கிஷாந்தன்)



நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எல்படை தோட்டத்தில் உள்ள ஒரு கொட்டகையில் நேற்று இரவு ஊரடங்கு உத்தரவை மீறி கசிப்பு உற்பத்தி செய்து வந்த இடத்தை திடீர் சோதனை நடத்திய போது 3,000 மில்லிலீட்டர் கசிப்பு மற்றும் 20,000 மில்லிலீட்டர் கோடாவுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கசிப்பை வடிகட்ட பயன்படும் சுருள்கள், பீப்பாய்கள், கேன்கள், எரிவாயு அடுப்பு மற்றும் எரிவாயு சிலிண்டரையும் பொலிஸார் இதன் போது கைப்பற்றினர்.

சந்தேக நபர் அப்பகுதியில் உள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு இதனை விற்பனை செய்வதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் இந்த சோதனை நடத்தப்பட்டது.

இதனையடுத்து, நோர்வூட் கியூ தோட்டம் சென்ஜோன்டிலரி பிரிவில் சட்டவிரோதமாக மாணிக்ககல் அகழ்வில் ஈடுப்பட்ட இருவரையும் நேற்றிரவு நோர்வூட் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், அவர்களை எதிர்வரும் தினங்களில் அட்டன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொரோனா அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டதன் மூலம் மத்திய மலைநாட்டில் உள்ள தோட்டப் பகுதிகளில் சட்டவிரோத மதுபான உற்பத்தி அதிகரித்துள்ளது என்று அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் கூறுகின்றனர்.




# முதலாவது தடுப்பூசி செலுத்தப்பட்டது

(தலவாக்கலை பி.கேதீஸ்)

வட்டகொடை கிராம சேவகர் பிரிவில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொவிட் 19 கொரோனா தடுப்பு மருந்தேற்றும் நடவடிக்கைகள் நேற்று வட்டகொடை தமிழ் வித்தியாலயத்தில் நடைப்பெற்றது.

இதில் வட்டகொடை மேற்பிரிவு, வட்டகொடை கீழ் பிரிவு, யொக்ஸ் போட், வட்டகொடை நகர், ஒலி ரூட் கீழ் பிரிவு, சமன்புற கொலனி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு முதலாவது தடுப்பூசி செலுத்தப்பட்டது.


# நிவாரண போதிகள் வழங்கி வைப்பு



(தலவாக்கலை பி.கேதீஸ்)

பொது முடக்கத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் நிதியொதுக்கீட்டில் பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரனின் பங்குபற்றலுடன் பூண்டுலோயா பகுதியில் 50 குடும்பங்களுக்கு நிவாரண பொதிகள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின்; கொத்மலை பிரதேசசபை உறுப்பினர் இராமையா பாரதிராஜாவினால் வழங்கி வைக்கப்பட்டன.

# வைத்தியசாலைகளுக்கு பாதுகாப்பு உடைகள் வழங்கி வைப்பு




(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஐக்கிய இளைஞர் சக்தியின் வன்னி மாவட்ட செயலாளர் லக்ஷயன் முத்துகுமாரசாமியினால் திங்கட்கிழமை

ஒரு தொகுதி PPE பாதுகாப்பு உடைகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்தப் பாதுகாப்பு உடைகள் மாங்குளம் ஆதார வைத்தியசாலை மற்றும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டன.

# 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு நடமாடும் சேவை மூலம் தடுப்பூசி.!

(அ.அச்சுதன்)





தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சிராஜ் நகர் கிராம அலுவலர் பிரிவை சேர்ந்த 60 வயதிற்கு மேற்பட்ட கொவிட் தடுப்பூசி பொற்றுக்கொள்ளாதவர்களுக்கு நடமாடும் சேவை மூலம் வீடு வீடாக தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையானதது சுகாதார வைத்திய அதிகாரி,கிராம அலுவலர் ,பொது சுகாதார பரிசோதகர் மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்களால் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நலம் காப்போம்

# ஆரம்பம் - அமர்வு 1

## 08 புதன்கிழமை புரட்டாதி 2021

பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணி வரை – SL Time

## கேள்விகள் பதில்கள் ஆலோசனைகள்

வைத்தியர்கள் குழு

**Dr P Brighton**
GP, AUS

**Dr T Sathiyamoorthy**
Director, Jaffna Teaching Hospital, SL

**Dr G Sukunan**
RDHS, Kalmunai, SL

**Dr M Karunakaran**
GP, Aus

**Dr M Jeyarasa**
SMO, Psychiatric Unit, DGH, Kilinochchi, SL

கோவிட் தொற்று தொடர்பான உங்கள் அனைத்து கேள்விகளுடன் இணையுங்கள்
ஒன்றிணைந்து கோவிட் பேரிடரை முறியடிப்போம்

STAY HOME SAVE LIVES

# நலம் காப்போம்

இணையவழி கோவிட் வைத்திய ஆலோசனை மையம்

ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை & சனிக்கிழமை
இலங்கை நேரம்
பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணி வரை

தாயகத்தைச் சேர்ந்த அனைத்துலக மருத்துவர்கள் இணைந்து வழங்கும் மெய்நிகர் ஆலோசனை மையம்

ORGANISED BY KILI PEOPLE

MEETING ON ZOOM

இணைந்துகொள்ளும் நுழைவு எண்

## ZOOM ID - 843 7942 1098

## ஆரம்பம்: 08 புதன்கிழமை புரட்டாதி 2021

வைத்தியர்கள் குழு

**AUSTRALIA**
Dr P Brighton
Dr R Ahilan
Dr N Vinothan
Dr R Sivananthan
Dr F Darious
Dr M Karunakaran
Dr Y Mahinthan
Dr T Baskaran
Dr P Pushpakumar
Dr M Pakeerathan
Dr R Elavarasi
Dr K Sivagnanam

**SRI LANKA**
Dr M Jeyarasa
Dr M Kugarasa
Dr P Judi
Dr T Koneswaran
Dr K Manokaran
Dr T Sathiyamoorthy
Dr M Srithar
Dr R Krishnalingam
Dr K Anusha
Dr A Damian
Prof Umakanth
Dr V Premnath

**SRI LANKA**
Dr S Thusiyanthan
Dr V Shanmugarajah
Dr S Sivathasan
Dr M Osman Charles
Dr R Ramesh
Dr G Sukunan
Dr S Suganthan
Dr K Ragulan
Dr N Bavan
Dr P Sri Shankar

**CANADA**
Dr T Nagiah
Dr P Siva
Dr Rajes Logan
Dr G Somasekaram

**EUROPE**
Dr P Mathyalakan
Dr R Sathananthan
Dr T Mugunthan
Dr T Gowripalan
Dr R Kathirselvan
Dr K Maithili
Dr K Sujanthan
Dr M Raj
Dr S Suseelan
Dr K Senduran

**SOUTH AFRICA**
Dr G Tharmenthira

தன்னார்வ வைத்தியர் குழுவில் இணைந்துகொள்ள தொடர்புகொள்ளவும்
INFO@KILIPEOPLE.ORG | WWW.KILIPEOPLE.ORG